Vallur Branch Library

குண்டுத் தாக்குதல்களுக்கு ஐ.தே.க.வே காரணம்!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 28 இதழ் 59
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 10-4-1994

சு.க. குற்றச்சாட்டு

(தொடர்ச்சி)

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளுக்கு சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தாரே காரணம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எச். பி. திசநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதித் தேர்தல் மாகாண சபைத் தேர்தலிலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி அடையும் நோக்கோடும், தென்மாகாண சபையில்

(6-ம் பக்கம் பார்க்க)

இந்திய ஜனாதிபதியின் மகன் வரவிருந்தார்

(தொடர்ச்சி)

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் மகன் இன்று தெகிவளை மிருகக்காட்சிச் சாலையை பார்வையிட உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் மிருகக்காட்சிச் சாலையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அவரது விஜயமும் ரத்தாகிவிட்டது.

இந்திய ஜனாதிபதியின் மகனின் மிருகக்காட்சிச்சாலை விஜயத்தைத் தடுப்பதே இந்த குண்டுவெடிப்பு இடம் பெற்றதாக மிருகக்காட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

கடந்த இரு தினங்களிலும்

கொழும்பில் ஐந்து இடங்களில்

பாரிய குண்டு வெடிப்புகள்!

நகரில் பெரும் பதற்றம் புலிகள் வேலையாம் பலரும் சந்தேகம்!

(தொடர்ச்சி)

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவும் நேற்றுக்காலையும் வெவ் வேறு இடங்களில் இடம்பெற்ற ஐந்து குண்டுவெடிப்புச் சம்பவங்களால் தென்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினமிரவு நான்கு ஹோட்டல்களிலும் நேற்றுக்காலை தெகிவளை மிருகக்காட்சிசாலையிலும் இக் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். தமிழ் தம்பதியினர் இருவரும் தமிழ் இளைஞர் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

4 விடுதிகளில் குண்டு வெடிப்பு

நேற்று முன்தினம் இரவு கொழும்பை அடுத்துள்ள 'மவுண்ட்லவினியா' ஹோட்டலிலும் கொழும்பில் சுமார் 8-30 மணிக்கும் 8 45 மணிக்கும் இடைப்பட்ட முதல் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு தமிழர் காயமடைந்த நிலையில் தப்பினார். இக்குண்டு வெடிப்பால் ஹோட்டலுக்கு பாரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் இப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. உடனடியாக அப்பகுதிக்கு பொலிசாரும் படையினரும் விரைந்தனர். இரவு நேரம் இடம் பெற்ற இக்குண்டு வெடிப்பால் நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

(6 ம் பக்கம் பார்க்க)

படையினர் உஷார் நிலையில்

கொழும்பு நகரில் பாதுகாப்பு படையினர் 24 மணி நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு சோதனைகள் நடத்தியும், வெளியிடங்களுக்குச் சென்றோரின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்தும், வன்முறைகளில் ஈடுபடும் பொதுமக்களை பற்றியும் தீவிரவாதம் செலுத்தப்படுகிறது. நகரில் நடமாடும் மக்கள் எப்போதும் தம்முடன் தேசிய அடையாள அட்டையை அல்லது ஏதாவது கூட வேறு ஏதாவது ஆவணங்களை வைத்திருக்க வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமிட் டன் வலியுறுத்தி கேட்டுள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

தமிழர் மத்தியில் பதற்றம்

குண்டு வெடிப்புகளை அடுத்து கொழும்பில் தமிழர் மத்தியிலும் பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டது. கொள்ளுப்பிட்டியில் ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை அடுத்து அப்பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. ஏற்கனவே கொழும்பில் பல ஆயிரக்கணக்கான தமிழர் கைது செய்யப்பட்டு வரும் இவ்வேளையில் இக்குண்டு வெடிப்பும் மேலும் பல கைதுகளை ஏற்படுத்துமென்றும் தமிழ் இளைஞர்கள் பலர் துப்பாக்கி முனையில் அடித்து இழுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. தமிழர் கைது செய்யப்படுவது உடன் ஆரம்பமாகியிருப்பதாகவும் செய்தி வெளியிடப்பட்டது.

மிருகக்காட்சிசாலை சோதம்

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் நேற்றுக் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது இக்குண்டு வெடிப்பு காலை 8 மணிக்கு இடம்பெற்றது. சம்பவம் நடைபெற்றபோது அங்கு சுமார் 300 பார்வையாளர்களும் 150 வெளிநாட்டினரும் மிருகக்காட்சிசாலை வளாகத்தில் இருந்தனர். எனினும் குண்டு வெடிப்பால் பார்வையாளர்களுக்கோ, மிருகங்களுக்கோ சேதம் எதுவும் ஏற்படவில்லை. இதையடுத்து பார்வையாளர் கள் அச்சத்தினால் நாலாபுறமும் தெறித்து ஓடினர். உடனடியாக அவ்விடத்திற்கு பொலிசார் விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்களாம்.

குண்டு வெடிப்புகள் தொடரும்

கொழும்பில் தொடர்ந்தும் குண்டு வெடிப்புகள் இடம் பெறலாமென பொலி ஸார் எச்சரித்துள்ளனராம். (ஏற்கனவே கொழும்பிற்குள்

(2-ம் பக்கம் பார்க்க)

சமாதானத்திற்கு முன் இராணுவ நடவடிக்கை

(தொடர்ச்சி)

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் பற்றி, பி. பி. ஸி. ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரகீமன் வீரக்கோனிடம் நேற்றிரவு பேட்டி கண்டது தெரிந்திருக்கலாம். அவர் கூறிய பதில்களும் வருமாறு:-

கே:- யுத்தத்தை வடபகுதிக்கு கொண்டுபோகப் போவதாக எல்லா ஜனாதிபதி கூறியதாகவும் இதற்கு குண்டுவெடிப்பு இடம் பெற்றதாக மிருகக்காட்சி

(2-ம் பக்கம் பார்க்க)

இளைஞர் யுவதிகளுக்கு சிறப்பு வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமையும், செவ்வாய், புதன் கிழமைகளிலும் இளைஞர்- யுவதிகளுக்கான சிறப்பு வேலைத்திட்டம் நடைபெறுமென வடமாகாண பிரதம செயலாளர் அறிவித்துள்ளார்.

புதுவருட ஆரவாரம் களையிழந்து விட்டது

(தொடர்ச்சி)

தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பை கொண்டாடி ஆரவாரமாக மகிழ்ந்திருக்கும் கொழும்பு நகர் குண்டு வெடிப்புகளையடுத்து களையிழந்து போய்விட்டதென எதிர்பார்க்கப்படுகிறது.

நகரில் எங்கும் மக்கள் கூட்டம் நிறைந்திருப்பதாகவும் குண்டு வெடிப்புகள் தொடர்வதாகவும் எற்ற அச்சமே மக்கள்

(2-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஏகாத்தவீணை விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க. முகவரி மு அருளானந்தம், 59 கந்தசிவடி புதுவீதி, யாழ்ப்பாணம். (எ-3973)

நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமதரி நோவு என்னை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி 900)

மணப்பெண் தேவை

கோண்டாவிலைச் சேர்ந்த 33 வயதுடைய மணமகனுக்கு படித்த நல்ல பண்புள்ள குடும்பத்திலிருந்து மணமகளை எதிர்பார்க்கிறோம். சாதகம் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 939, C/o சமநாடு, யாழ்ப்பாணம். (கி-939)

O/L கணிதம் 94

Distinction, Credit பெற மேறடைய இதனரையும் கித்தியடைதோரும் (ஆண்டு-9 10) உயர்தரக் கற்பிக்கப்படுவர் ஆசிரியர் B. Sc 85 கெல்ல கோவிலடி, திருநெல்வேலி. (கி-942)

ENGLISH O/L

Credit பெற்றேறடைய ஆரம்பத்தில் இருந்து பல தனிப்பட்ட பரிசோதனை மூலம் தனிமையாக கற்பிக்கப்படுவர். பட்டதாரி 85, கெல்லசேலி வடி, திருநெல்வேலி (கி-943)

1 மாத கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

வயதின் பிறவுன் ஒருமாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒரு குஞ்சு நூற்றிருபத்து ரூபாய் மட்டுமே தொடர்புகளுக்கு சோழிப் பண்ணை, பொன்னாலை வீதி, திருநெல்வேலி. (எ-3975)

வெற்றிடம்

யாழ்ப்பாண நிலுவலை முன்னணி நிறுவனமொன்றுக்கு பிரகாசமான தேவை ஆண்களும், பெண்களும் விண்ணப்பிக்கலாம். முழு விபரங்களுடன் விண்ணப்பம் செய்க. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். விளம்பர இல எ-3971, மே/பச சமநாடு, யாழ்ப்பாணம். (எ-3971)

1994-95ம் வருஷ பலன்களும், ராகு கேது மாற்றமும்

சந்தானின் எல்லா ராசிகளின் பலன்களும், ராகு, கேது மாற்றமும் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். பாடசாலை உபகரணங்களுக்கு பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (கி-945)

O.L கணிதம்

Gi C. E. (O. L)இல் உயர பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடைய தவறிய மாணவர்களும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுவேறடைவில் கற்பிக்கப்படும். ஆறுமுக நாதன். 10 ஆம்கேல் கிழக்கு ஒழுங்கை, சோதேந்திரா வீதி, சண்டிக்குளி. (கி-941)

இலவச ஆலோசனை

எங்களின் A C M. A. Transport Marketing பட்டங்கள் பெற்றவர். இலவச சாதக சேவை மனப்பொருத்தம் கடுப்படையில் தமிழ்முறைப்படி மேல்வருப்பு படிகளும் பிரசன்ன ஆலோசனை கூறவும் புதுமுறை. — சதுர மகிப்பிள்ளை, 15/3, முருகேசர் ஒழுங்கை, முத்தினைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம். (கி-935)

ஆன்மீக பூபதிக்கு அஞ்சலி

(கவிதை)

பாரையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றக் கழக மண்டபத்தில் ஆன்மீக பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

வீடுகள் ஒழுங்கைகள் தோறும் வீதிகள் பலவற்றில் ஆன்மீக பூபதிக்கு அஞ்சலிப் பதாதை அமைக்கப்பட்டு ஆன்மீக பூபதியின் உருவப் படத்துக்கு மலர்தீப அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

-59

புதுவருக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திலிருந்து இருக்குமெனவும் இதனால் புதுவருட விசாரமும் தடைப்படும் எனவும் கூறப்படுகிறது.

கொழும்புநகரில் நிலவும் தமிழர்கள் பல ஆயுதங்களை இன்று நிறைந்திருப்பதாகவும் களும் பல இடங்களில் எதிர் தேடுதல்வேண்டுமென்றும் எனவும் கருதப்படுகிறதாம்.

குண்டுவெடிப்புகள்தொடர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்ட குண்டு வேலைசெய்யாமல் போய்விட்டதாலும் வேறும் பல இடங்களில் வெடி குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் இவை குறித்த சந்தேகத்தின் பேரிலும் படலாமெனவும் உளவுத் துறையினரும் தெரிவித்துள்ளனர். மறைத்துவைக்கப்பட்டிருக்கும் குண்டுகளை கண்டுபிடிக்க விசேட அதிரடிப்படை விரைவுகவி ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகிறதாம்.

தாய்மார்களே!! கவலையை விடுங்கள்.....

பளிச்சிடும் வெண்மைக்கு

ரோயல் நீலம்

கடைகளில் விற்பனையாகும் நீலப் பைக்கட்டுகளைப்போல போலி நீலம் இல்லையென தமிழீழத்தில் உத்தரவாதம் கொண்டு விற்பனையாகிறது.

★ 100 ஆடைகளுக்கு ஒரு பைக்கட் ரோயல் நீலம் போதுமானது. ஒரு பக்கெட் 6/50.

ரோயல் இண்டஸ்ரீஸ்

மொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (ஏ-3964)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை கோண்டாவில் பிரிவு

ஆண்டுப் பொதுக்கூட்டமும் பிரிவுத் தேர்தலும்

27 - 03 - 1994 இல் ஒதுக்கியவாறு கூட்டமும், தேர்தலும் 24 - 04 - 1994 (ஞாயிற்றுக் கிழமை) முற்பகல் 11 - 00 மணிக்கு நீர்வேலி சந்தியில் இந்துக்கல்லூரியில் சோபாய் பிரதி தலைமை வகிக்கும் திருமதி அ. கனகரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெறும். 12 03 - 1994 இல்லில் அங்கத்துவப் பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மாத்திரமே இக்கூட்டத்திலும் தேர்தலிலும் பங்குபற்ற வருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். வாக்காளர்களைப் பெயர்ப்பட்டியல் பிரிவு காரியாலயத்தில் பரிசோதிக்காக வைக்கப்படுகிறது. 13 - 03 - 1994 இல் நியமனம் பத்திரங்களை தாக்கல் செய்து 15 - 03 - 1994 இல் வாபஸ் பெறுதல் போட்டியாளர்களுடனே தேர்தல் போட்டியில் பங்குபற்றுவர். இதற்கான சுற்றறிருபங்கள் பிரிவுச் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07 - 04 - 1994.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
இ. மயில்வாகனம்
கௌரவ செயலாளர்,
சோபாய்ப் பிரிவு.

(ஏ-3977)

தேவி வேற்றிடம்

எமது பிரதம நிருவாகத்திற்கு

திட்ட அலுவலர் தேவைக்கு

ஆகக்கூடியவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 25-04-94

தகமைகள்:

- பொருளியல் இறப்புப் பட்டதாரி அல்லது
- ரெஜிஸ்ட்ரார் நாயகம் தரத்தில் திறையுடன் இத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள்.
- திட்டமிடல் திட்டம் கண்காணிப்பு வேலை செய்த அரச ஊழியர்களுக்கு கவர்ச்சித் தகமை விண்ணப்பிக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்,
தேசிய தென்னை வள அபிவிருத்திப்பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்
விவசாயத்துறை வீதி,
தாவடி. (எ-3976)

"வெள்ளி விழா" ஆண்டில்

BOND கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம்.

1969-ஆம் ஆண்டு முதல் தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்

A/L 96

விஞ்ஞானம்
கணிதம்
வர்த்தகம்
கலைப் பிரிவுகள்
ஆரம்பம்:
16 - 04 - 1994

OL 1994

★ Day Class
11 - 04 - 94
★ Evening Class
பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர சனி, ஞாயிறு வகுப்புகள்
11 - 04 - 1994

3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆம் ஆண்டுகள்
Typing
Short - Hand
Spoken English
வகுப்புக்களும்
12 - 04 - 1994

அனைத்து வகுப்புகளுக்குமான மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன்

★ மாணவர்களின் கட்புலன், செவிப்புலன்களைக் கருத்திற் கொண்டும் A/L, O/L வகுப்புகளுக்கு 60 மாணவர்களும், 3, 4, 5, 6, 7, 8, 9, 10-ஆம் ஆண்டு வகுப்புகளுக்கு 35 மாணவர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(ஏ-3974)

Jaffna Branch Library

மக்கள் மண்ணை நேசிக்கும் போதுதான் புதிய இலக்கியங்கள் பிறக்கின்றன

— கோமல் சுவாமிநாதன்

மிழகத்திலும் சரி இலங்கையிலும் சரி புத்திஜீவிகளை, ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் என்று கூறிக்கொள்பவர்கள் தமது ஆக்கங்கள் சாமானியர்களுக்கென்று படைக்கும் படைப்புகள் பொதுமக்களுக்கு புரிவதாக இல்லை. இந்த 'இலக்கிய அராஜகம்' ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும், நாடகாசிரியரும், 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் மேற்கண்டவாறு ஓர் கலந்துரையாடலில் குறிப்பிட்டார். அவர் கலந்துரையாடல்களிலும் கூட்டங்களிலும் கருத்து தெரிவித்த தொகுத்துத் தருகின்றோம்.

இன்னொரு விதத்திலும் ஒரு சீரழிவு நடைபெறுகின்றது ஒருபுறம். ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகளின் மலிவான போக்கால் சாதாரண வாசகன் ஒரு கீழான நிலைக்கு தள்ளப்படுகின்றான். தமிழகத்தில் ஒரு பெண்மணி தனது வீட்டுத் தேவைக்காகச் சொடுக்கப்படும் மரக்கறித் தேங்காய் எண்ணெய்ப் பட்டியலின் முழுவதையும் குறிப்பிடும் நிலை தோன்றியிருக்கிறது. அவசரமாக உயர்தரமான இலக்கியம் என்ற அவலப் போக்கையும், வியாபார ரீதியாக வாசகர்களை இழுக்கின்ற இந்த ஜனரஞ்சகப் பத்திரிகைகளின் கருத்து பொது மக்களை தரமான வாசகர்கள் என்ற நிலைக்கு கொண்டு வருவதற்கு பல 'மீடியமான' சஞ்சிகைகள் வெளிக்கொணர வேண்டும். தமிழகத்தில் ஒரு திரைப்பட நடிகை நவீன இலக்கியம் பற்றி ஒரு கருத்து கூறினால் அது தான் உண்மை என்று ஏற்றுக் கொள்ளும் நிலை தான் தமிழ் வாசகர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது.

இந்நிலையையும் மீறியாழ்ப்பாணத்தில் ஒரு போராட்டத்தை வைப்படுத்தி, புதிய வடிவங்கள் வெளிவருகின்றது இது எனக்கு பிரமிப்பை ஏற்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தில் பல நல்ல நாடகங்கள் உருவாகுவதற்குரிய சமிக்ஞைகள் தோன்றியிருக்கின்றன என்பதனை நான் பார்த்த நாடகங்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

தமிழகத்து சஞ்சிகைகளில் ஈழத்து இலக்கிய படைப்புகள் இடம் பெறுவதில்லை என்ற கருத்துண்டு. தமிழகத்து பத்திரிகை, சஞ்சிகைகள் காரியாலயங்களில் 500 இற்கு மேல் ஒரு மாதத்துக்கு பிரசுரத்துக்கு வருகின்றன. அதில் 100 கதைகள் பிரசுரத்துக்கு தெரிவாகின்றன. அதில் 80 கதைகள் தான் பிரசுரமாகின்றன இடம் போதாமையினால் இன்று தமிழகத்து சஞ்சிகைகள் ஒரு நிமிடக்கதை ஒரு பக்கக்கதை என்று வெளிவருகின்றன.

கதைகளுக்கு அடிக்குறிப்பு போடுங்கள் என்று கூறுவது எங்கேப் பொருத்த மட்டில் பிழையான கருத்தல்ல மகிழ்ச்சி கூறிய கருத்துக்கள் இன்று தமிழகத்தில் பிராந்திய ரீதியான அமைவைக் கொண்ட கி. ராஜநாராயணன் போன்றோர் படைக்கும் படைப்புகளுக்கு அடிக்குறிப்பு போடுமாறு பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்திய சுதந்திரத்துக்கு முன் தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டம் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். மணிக்கொடி போன்ற பத்திரிகைகளிலும் பாரதி போன்ற விடுதலைக் கவிஞர்களின் பாடல்களும் தமிழக இலக்கியத்துக்கு உரமூட்டின. சுதந்திரம் பெற்ற பின்பு மக்களிடம் இருந்த ஓய்வான நேரத்தை பயன்படுத்தி கல்வி நல ஆசிரியர்களும், தொழில் சம்பாதிப்பவர்களும் முன்னுரிமை பெற்றனர். அதனால் திருடர், கொலையாளி, இலட்சியவாதிகளாகினர். அவர்கள் தமிழக மக்களுக்கு வழிகாட்டிகளாக வந்தார்கள். இந்த அவல நிலையைத் தமிழகம் தினந்தோறும் சந்தித்து வருகின்றது. இந்த தலைமைப் போக்கு தலைதூக்கியதால் நாடு லட்சியப் பற்றில்லாத உப்புச் சப்பற்ற நிலைக்கு தமிழகம் தள்ளப்பட்டு விட்டது. இதனால் தமிழக வாசகன் தரமற்ற வாசகராகும் நிலைக்கு தள்ளப்பட்டான்.

மண்வாசனையை எடுத்துக் கொண்டால் இங்கு வீதி தம் பரவலாக்கும் ஒரு தொழிலாளி அந்த நாவலின் மிகச் சிறந்த படைப்பாளிகளாக வாசகர் தேவ நாவலர், வைக்கம் முகம்மது பசீர் தகழி போன்றோரது ஆக்கங்களைப் படிக்கும் நிலையில் இருக்கிறார். அந்த நிலைக்கு மக்களை மீட்டு இலக்கிய ரசிகர்களாக்க 'சுபமங்களா' போன்ற நடுத்தரமான சஞ்சிகைகள் ஏற்பட வேண்டும். இன்று தரமான படைப்புகள் என்று மார்தட்டி வரும் சிற்றிலக்கிய ஏடுகள் பல இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவதற்கு இந்த அராஜக இலக்கியமே காரணம்.

ஜெயகாந்தன் போன்றோர் ஆரம்பத்தில் மக்கள் படைப்பாளிகள் என்று கூறினாலும்; பிற்காலத்தில் பெரிய பத்திரிகைகளில் எழுதியதனால் தங்கள் 'இமேஜ்' பாதுகாக்க இன்று எழுத்துலகில் இருந்து ஒதுங்கிக்கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறாக இருந்தாலும் மக்கள் மண்ணை நேசிக்கிற போது புதிய இலக்கியங்கள் பிறக்கின்றன. அந்தப் புதிய இலக்கியங்களை ஈழத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

தொகுப்பு:- மணிசேகரன்

இன்று

(யாழ்ப்பாணம்)

'உதையந்தாட்டப் பிரச்சினைகள்' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். திரு. முருகநேசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நூல் வெளியீட்டுரையை யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுச் செயலாளர் திரு. சு. ரவி நிகழ்த்துவார்.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் இ. மகேந்திரன், வலிகாமம் கிழக்கு உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் திரு. சிவிபேசன் அறிமுகவுரையை திரு. அ. யோகராசா ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்துவர். -162

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஊர்காவற்றுறைப் பிரிவு உப கிளையின் முதலுதவிப் பயிற்சி நிலையத்தின் இரத்ததான முகாம் இன்றும் நாளையும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் இன்று காலை 9-00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் யாழ். கிளை உபதலைவர் அமரர் க. புவனேந்திரனின் முதலாம் வருட அஞ்சலிக் கூட்டம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் இன்று 10ம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி நே. சிவராசா தலைமையில் நடைபெறும்.

ருவாண்டாவில் வீதிகள் எங்கும் ஆயிரக்கணக்கில் சடலங்கள்

(லண்டன்)

மத்திய ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் வன்முறைகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படுவதாகவும் வீதிகள் எங்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சடலங்கள் கிடப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க தலைமைப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ருவாண்டா அதிபர் விமானத்தில் பயணம் செய்தவேளை ரொக்கட் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்ததையடுத்தே இத்தகைய மோதல் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில் ருவாண்டாவில் புதிய அரசு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு 'ருத்து' அரச படைகளுக்கும் ருவாண்டா தேசிய ருவ்து முன்னணிப் படைகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தாம் நம்புவதாக பெல்ஜியம் ஐ. நா. படைகளின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பிரான்சும், பெல்ஜியமும் ருவாண்டாவில் உள்ள தமது நாட்டுப் பிரஜைகளை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. பிரான்ஸ் துருப்புகளும் ருவாண்டா நோக்கிச் செல்வதாக நேற்று பி. பி. சி. தனது காலைச் செய்தியில் தெரிவித்துள்ளது. -ஏ-ஓ

பெற்றோலிய கூட்டுத்தாபன பிரிவு தனியார் வசம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான லங்கா லுப்ரிகேற் ஸ்தாபனத்தின் 91 சதவீதமான பங்கை 'கல்டெக்ஸ்' என்ற வெளிநாட்டு ஸ்தாபனத்துக்கு விற்பனை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

மேற்படி ஸ்தாபனம் லாபம் ஈட்டிவந்த ஒரு ஸ்தாபனம் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இலங்கை அரசும் கல்டெக்ஸ் நிறுவனமும் இதுசம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளன. விரைவில் லங்கா லுப்ரிகேற் ஸ்தாபனத்தின் பங்குகளை கல்டெக்ஸ் நிறுவனம் கொள்வனவு செய்யும்.

புதிய நிறுவனத்தின் நிர்வாகம் மாற்றதும் 525 ஊழியர்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப் பட்டது. -இ

வைத்திய அத்தாட்சி பத்திரம் கட்டணம் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் அரச ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய தனிப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்படும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்திற்கு (Medical Certificate) அறவிடப்படும் கட்டணத்தை இருபது ரூபாவிலிருந்து முப்பது ரூபாவாக சுகாதார திணைக்களம் அதிகரித்துள்ளது.

கொழும்பிலுள்ள சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் இது தொடர்பாக அண்மையில் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் வைத்தியசாலைகளுக்கான கட்டணங்கள் யாவும் மார்ச் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் பிரகாரம் தனிப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கான புதிய கட்டணம் 30ரூபா என்றும் தனிப்பட்ட வைத்திய பரிசோதனை கட்டணம் 200 ரூபாவென்றும் அறிவித்துள்ளார். 72-ஜ

கிணற்றில் விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் அள்ளியபோது கிணற்றுள் தவறி விழுந்த சிறுமி படுகாயமடைந்தார்.

உரும்பிராயில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கேசுதாஸ் வெகிமி (வயது 11) என்ற சிறுமியே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடும் வெப்பம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் கடும் வெப்பம் நிலவுகின்றது. இதனால் அநேக மக்களுக்கு பொக்குளிப்பான், கூவைக் கட்டு, கண்நோய் ஆகிய வெப்ப நோய்கள் ஏற்பட்டுள்ளன.

வயோதிபர்கள் அநேகர் வெப்பத்தினால் மயக்கம் அடைந்து வெயில் தாழ்ந்த பின்பு பயணிப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. -59

15 குடும்பங்கள் தெரிவு

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப்பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 15 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வீடு கட்டுவதற்கென 7500 ரூபா ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படவிருக்கிறது.

பிரதேச செயலர் தலைமையில் கிராமசேவை அலுவலர், வீடமைப்பு உத்தியோகத்தர் கிராமிய குழு ஆகியோரைக் கொண்ட குழுவினர் வீடு பெறுவதற்கு தகுதியுடையோரைத் தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். -163

விவசாயிகள் ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மேல்வரர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1993 கார்த்திகை 1993 ஐப்பசி, 1994 சித்திரை ஆகிய மாதங்களிலிருந்து ஓய்வூதியம் பெறவிருக்கும் விவசாயிகளது ஓய்வூதியக்கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு மேதி தொழில் காப்புறுதி சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது அன்று 1994 சித்திரை மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. -கி

மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு மயிலணி ராஜா கோவில் மஹோற்சவம் இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும்.

க. பொ. த [சா/த] பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் க. பொ. த. (சா/த) பரீட்சை முடிவுகள் வருமாறு:-

5D, 1C, 1S ஒருவர், 4D, 2C, ஒருவர். 3D, 2C, 2S ஒருவர், 2D நால்வர்.

0 0

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் 5 விசேட சித்திகள் பெற்றோர் 4 பேர், 3 விசேட சித்திகள் பெற்றோர்கள் 2 பேர்

0 0

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் 2டி, 3சி, 2 எஸ் ஒருவர், 1டி, 5சி ஒருவர் 1டி, 4சி, 1 எஸ் ஒருவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மூவர் 7டி, இருவர் 6டி 6பேர், 5 டி 8பேர் 4 டி யையும் பெற்றுள்ளனர். -52-154

2000 அடையாள அட்டைகள் விநியோகிக்க ஏற்பாடு

(மானிப்பாய்)

யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்த 1200 சாதாரண தேசிய அடையாள அட்டைகளும்; தொலைந்த அடையாள அட்டைகளுக்கு பதிலாக 700 அடையாள அட்டைகளும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் அலுவலகங்களுக்கு 8ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைகள் மூலம் விண்ணப்பம் செய்தவர்களின் 300 அடையாள அட்டைகள் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட பாடசாலைகள் இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். 71-இ

★ இன்று சாமுவேல் ஹானிமன் பிறந்த தினம்:

ஹோமியோபதி வைத்திய முறையால் தீங்கோ, பக்கவிளைவோ ஏறபடாது

டாக்டர் எம். வி. தில்லைச்சந்திரன்

ஹோமியோபதி வைத்திய முறையானது ஏனைய மருத்துவர்களால் மாற்ற முடியாதெனக்கைவிடப்பட்ட பல நாட்பட்ட நோய் களுக்கு நிரந்தர மாகத் தீர்வாக உள்ளது. இம்முறையை 18ம் நூற்றாண்டில் டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்னும் ஜேர்மன் வைத்திய விஞ்ஞானி கண்டு பிடித்தார். இம்முறை மூலம் கண்டு பிடிப்பதற்கு முன் டாக்டர் சாமுவேல் ஹானிமன் எம். டி. என்ற உயர்ந்த பட்டம் பெற்ற அலோபதி டாக்டராகத் தொழில் புரிந்தார். இன்று இவரது பிறந்த தினமாகும்.

ஹோமியோபதி வைத்தியத்தில் நோய்களுக்குப் பெயரிடுவது ஒரு தனிவகை மாறுபாடான தோற்றமே தவிர வேறில்லை.

அணுவின் சக்திகளால் ஆரம்பமாகி மனித உலகிற்கு ஆக்கமுறையில் பாவிக்கப்படுகிறது டாக்டர் சாமுவேல் ஹானிமனையே சாரும்.

இம்முறை உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் பரவி அதன் அருமை பெருமைகளை உலகறியச் செய்கின்றது. நமதுநாட்டிலும் ஹோமியோபதி வைத்தியமுறைமைகளை பெரிதும் விரும்பப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுத்துபவர்களுக்கு தீங்கோ பக்கவிளைவுகளோ வருவதில்லை. இவ் வைத்திய முறை மூலம் பிரதானமாகக் கொண்டு இக்குறிகளுக்கு வைத்தியம் செய்வதேஹோமியோபதி வைத்திய முறையாகும்.

கண் மிகமிக பிரதானமாகக் கொண்டு இக்குறிகளுக்கு வைத்தியம் செய்வதேஹோமியோபதி வைத்திய முறையாகும்.

மற்ற வைத்திய முறைகளில் உள்ள நீதிபோலவும் உள்ளபடி நீதிபோலவும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இக்கிக்கை மிக மிக இனிமையானது.

தனிச்சிங்களத்தில் அடிவங்கள்

(கரம்பை)

அரசாங்கத் நிறுவனங்களில் ஒய்வுபெறுபவர்களுக்கான கௌரவப அடையாள அட்டை வழங்கி வரும். தனிச் சிங்களத்தில் அனுப்பப்படுவதாகவும் அவ்வாறு மற்றும் உணவுக் கட்டுப்பாட்டு அலுவலக ஊழியர் ஒருவருக்கு கொழும்பு உணவு ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து தனிச் சிங்களத்தில் அடையாள அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. -59

அரச அதிபருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வீரனைத் தாக்குதலுக்கு இலக்காகிப் பலத்த சேதத்திற் குள்ளான சப்புறுதிக் கட்டுநிதாபனத்தின் வாழ் பிரதேச அலுவலகக் கட்டடத் தொகுதி திருத்தி அமைப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்டமைக்கும், காயப் புறுதியாளர்களின் நன்மை களுக்காகச் செய்துமுடித்த அரும்பணிய சேவைகளுக்காகவும் வாழ். மாவட்ட அரச அதிபர் வ. மாணிக்கவாசகருக்கு சப்புறுதிக் கூட்டுத் தாபன வாழ். பிரதேசிய அலுவலக ஊழியர் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. -162

உதைபந்தாட்டப் பிரச்னைகள்

அண்மைக் காலமாக உதைபந்தாட்டப் போட்டிகளில் நடைபெறும் வன்முறைகளின் இடம்பெற்ற வரும் அடிதடி மூப்பாகவும், கைலப்புகள் "உதைபந்தாட்டம் என்றாலே பிரச்னைகளது" என்றநிலைக்கு ரசிகர்களை தள்ளியுள்ளது. இந்நிலையில் இப்பிரச்னைகள் ஏற்படக்காரணம் என்ன அதனை தவிர்க்க வழியுண்டு என்பதனையும் விளக்கி உதைபந்தாட்டத்தில் திடீரென்று வெளிவந்த "உதைபந்தாட்டப் பிரச்னைகள்" என்ற நூல் இன்று வெளிவருகிறது.

கி. மே. மாவிட்டபுரம் எழுதிய இந்த நூலில் உதைபந்தாட்டத்தில் வன்முறைகளின் தோற்றம் ஆரம்பமானதில் நடுவர் ஆட்டக்காரர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், ஆட்டக்காரர் பார்வையாளருக்கு விதிவரை கல் 100 கேள்வி பதில்கள் உட்பட பல கோணங்களில் உதைபந்தாட்டம் பற்றி ஆரவப் பட்ட விளக்கவுரை கள் தரப்பட்டுள்ளது

முக்கியமாக பாடசாலை மாணவர்களை வெளிவந்துள்ள இந்த நூல் ஆட்டக்காரர்களும் மட்டுமல்ல விதிவரைகளும் ஆலோசனைகளையும் போட்டி களின் மதிப்பையும் மூக்கிய தாகப்படுத்துகிறது. 124 பக்கங்களுடன் தமிழில் வெளிவந்துள்ள இந்த நூலை எழுதியவர் திருநெல்வேலியைச் சேர்ந்த வி. மே. மாட்டின் ஆவார். இவர் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக உதைபந்தாட்டத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் பிறந்த உதைபந்தாட்ட வீரர் பரம்பரையாகவும் 45 ஆண்டுகளாகவும் நடுவராக 40 ஆண்டுகளாகவும் சேவை புரிந்து வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட போட்டிகளின் இன்றைய நிலையை உணர்ந்து இவ்வாறானதொரு நூலை வெளியிட்ட "தமிழ்நாடு பதிப்பகத்தினர்" முயற்சி பாராட்டுக்குரியதே. இந்நூல் ஒவ்வொரு உதைபந்தாட்ட வீரருக்கும் ஒவ்வொரு ரசிகருக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாகும்.

வி. கி.

'மகளிர் மட்டும்' பஸ்சேவை ஆரம்பம்

(தொழுவில்)

தொழுவில் அதன் சுற்றுப்புறங்களிலும் பெண்களுக்கென தனியான பஸ் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக காலையிலும், மாலையிலும் பெண்களுக்கென தனியாக பல பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. எந்த காரணம் கொண்டும் இந்த பஸ்களில் ஆண்களை பிரயாணம் செய்ய அனுமதிக்கப் படமாட்டாதென. என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. (வி-சி)

தமிழீழ நீதிமன்றில்....

வெங்காயம் திருடிய இருவருக்கு அபராதம்

(பருத்தித்துறை)

தேசுடைத்திருவிழா அறுவடை செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்த வெங்காயத்தை திருடிய இருவர்மீது பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றத்தில் அபராதமாக தலா 500 ரூபாவை யும் செலுத்தினர்.

பருத்தித்துறை கியரபாரி மூலையைச் சேர்ந்த ஒருவரின் வெங்காயத்தைத் திருடுவதை அதே இடத்தைச் சேர்ந்த இருவரும் எதிராக பருத்தித்துறை தமிழீழகாவல் துறையினர் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு விசாரணை நீதிபதி செல்வி பிரதீபா முன்னிலையில் நடை பெற்றபின் அவர்களுக்கு தலா 500 அபராதமும் விதிக்கப்பட்டது - 52

75,000 ரூபா அபராதம்

சுமார் ரோதமாக வேப்பு தயாரிப்பதற்காக நூறு லீற்றர் கோடா வைத்திருந்தபர் ஒருவருக்கு யாழ் மாவட்ட தமிழீழ நீதிபதி 75,000 ரூபா தண்டம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் சுமார் ரோதமாக நூறு லீற்றர் கோடா வைத்திருந்தமைக் குற்றம் சாட்டப்பட்டு தொடரப்பட்ட இந்த வழக்கு யாழ் மாவட்ட தமிழீழ நீதிபதி திருவாளர் முன்னிலையில் சாட்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதிபதி எதிரிக்கு 75,000 ரூபா தண்டப்பணத்தை தவறும்பட்சத்தில் 120 நாட்கள் கடூழிய தண்டனை விதித்தும் தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டப் பணம் செலுத்தத்தவறும் பட்சத்தில் ஏழு மாதங்கள் கடூழிய சமூக சேவையில் ஈடுபடவேண்டுமென்றும் மேலும் இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (162)

நீரில் மூழ்கி மரணம்

(உடுவில்)

உடுவில் வடக்கைச் சேர்ந்த இன்னாத்தம்பி வீரசிங்கம் (60 வயது) என்பவர் கிணற்றில் வீழ்ந்து நீரில் மூழ்கியதால் மரணமானார். உடுவில் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் திரு. மகேஸ்வரன் ஜெயராஜ் (வயது 24) என்ற பொலிஸே படுகாய மடைந்தார்.

வீதி போக்குவரத்து சீராக்கும் பணி

(உடுவில்)

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த வேளையில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை மேற்படுத்தி சீராக்கும்பணியில் ஈடுபட்டிருந்த சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சுன்னாகம், மருதனார்மடம் வீதிகளில் காலை 7 மணி முதல் 8-30 மணி வரை இயங்கும் வீதிப்போக்கு வரத்து ஒழுங்குகளை நிறுத்தி விட்டு போக்குவரத்து வழக்குகளை குறைத்து வருகின்றனர். -109

தேநீர்க் கடையில் திருட்டு

(நெல்லியடி)

தேநீர்க்கடையின் பிரதான கதவை உடைத்து உள் புகுந்த திருடர்கள், மேசை லாச்சியிலிருந்த ஒரு தொகை பணத்தையும் அலுமாரியில் வைக்கப்பட்ட பெறுமதியான பாதணி வகைகளையும் சூறை யாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மதிலை மறித்து மேற்கு முன்புறம் உள்ள ஹோட்டலில் நிகழ்ந்துள்ளது. இதுபற்றி கடை உரிமையாளரான க. தங்கவேல் பருத்தித் துறை காவல் பணிமனையில் புகார் செய்துள்ளார். -160

பனையால் விழுந்து மரணம்

(உடுவில்)

சுன்னாகம் கந்தசுவாமி முகாமை சேர்ந்த சிறான் பசுபதி (வயது 65) என்பவர் தொழிலாளி கடமை நேரத்தில் பனை ஏறியபோது தவறி விழுந்து மரணமானார்.

இவரது மரணம் விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப் பட்டது. (109-சி)

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படை யில் இலங்கைக்கு வகுக்கப்பட்ட வரை பெறுபேறுகள் வரு மாறு:

மேற்படி பரீட்சையில் மருத்துவம் 01, விஞ்ஞானம் 01, பொறியியல் தொழில்நுட்பம் 02, கலை 02 ஆகியோர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். -சி

Branch Library

மனிதனுக்கு

அடக்க முடியாத ஆத்திரமும், கோபமும், ஆஸ்தியை அறவே வெறுத்தலிடமே

— பீஷ்மர்

நமது நோக்கு

அந்த நாள் நினைவுகள்!

1971 ஏப்பிரல் மாதம் இனிமை வரலாற்றில் மறக்க முடியாத மாதம்!

கடந்த ஆண்டு ஏப்பிரல் ஐந்தாம் திகதிதான், இலங்கையின் பல பொலிஸ் நிலையங்கள் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டன; அரசு நடுநடுங்கிப் போனது; சர்வதேச சமூகம் இலங்கைமீது திரும்பியது.

ஜே. வி. பி. யினர் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து தமது கவிழ்ப்பு சதிகளை மேற்கொண்டு வந்தனர். பலஸ்தீன், இந்திய உளவுப் படைகளின் இராணுவ உதவியோடு இவர்கள் அடக்கப்பட்டது.

பொதுப் பணத்தோடும், வெளிநாட்டு உதவிகளோடும், நாடு சுபீட்சத்திரமடைந்த பின் உருவாக்கிய திட்டங்களால் பலன் பெற்றவர்கள் யார்?

ஆட்சியில் அமர்ந்தோரும் அவர்களைச் சுற்றி வந்த சில கூட்டத்தினருமே இதுவரை ஆட்சி முறைமை ஆயுதங்களினால் மாற்ற எடுத்த முயற்சியே இந்த சேதுவார பாணியென இளைஞர்!

அவர்களுடைய பரபரப்பான, வேர்க்கொள்ளான ஐந்து சொற்பொழிவுகளில் ஒன்று இந்திய ஏகாதிபத்திய கிளர்ச்சி இலங்கை வைக்கு ஏற்படும் ஆபத்து.

எனவே, இந்த இயக்கத்தை முறியடிக்க இந்திய வேட்டில் சரிசமம் புரிந்து கொள்ளக் கூடியதே.

1971ல் இந்த இயக்கத்தை இராணுவ நடவடிக்கையால் ஆரம் புறம் செய்யப்பட்டது என் றதால் ஆக்கிரமிப்பாளர்கள் நம்பினர்கள்.

1982ல் மீண்டும் தலை தூக்கி எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து பெரும் அளவாக மாறியது அனைவரும் அறிந்த வரலாறு ஆகும்.

ரோஹண விஜயவீராவின் இறப்போடு இயக்கத்தைப் பூண்டோடு அழித்து விட்டதாகத் தான் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா பெருமை பேசினார்.

அதே பாணியில் வடக்கிலும் போராட்டத்தை நசுக்கலாம் என்றுதான் ஆட்சியாளர்கள் எண்ணம் செய்கிறதோ தெரிய. 1971ல் புதைக்கப்பட்ட கிளர்ச்சி மீண்டும் 1982 முதல் தோன்றியது. ஏன் என்பதை ஆய்வு செய்து, ராணுவ பலத்தால் எந்தக் கிளர்ச்சியையும் அடக்கிவிட முடியாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நோய்க்கான காரணத்தை அறிந்து ஏற்ற சிகிச்சை செய்யாது, வேறு மனே வலி போக்கும் மருந்து கொடுப்பதிற் பயனில்லை என்பதுதான் ஜே. வி. பி. இயக்கம் தரும் பாடமில்லையா?

தமிழ் எழுத்துக் கோலையுடன் புத்தகங்கள் விநியோகம்

உடன் நிறுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் அச்சடிக்கப் பட்டு யாழ் ரணம் செய்து வரப்பட்டிருக்கும் சில அப்பியாசப் புத்தகங்களில் பல பிழைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டு, அதனை உடனடியாகப் பாவனையில் இருந்து நீக்குமாறு கிடுக்குப் பிடி கோரிக்கை உதயசினம் படுத்தப்பட்டுள்ளது குறித்த மன்னாரைக் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கண்டனம் தெரிவித்து யாழ். மாவட்டக் கல்வி பணிப்பாளருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

27-03-94ல் மேற்படி கிடைத்த சம்பந்தமாக நாங்கள் அனுப்பிய மூலம் தொடர்பாக தாங்கள் எழுதிய நடவடிக்கையும் எடுக்காது, அதற்கு எதிர்மாறாகக் கோமடக் கல்வி அதிகாரிகள் மூலம் இப்புத்தகங்களே இறக்குமதி முடியும் வரை விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தியதாக அறிகின்றோம். இது தவறுக்கு மேல் தவறு இழைப்பதாகும். எமது கோரிக்கையைப் பெற்றோர் கல்வி அலுவலரும் வரவேற்றதாக் காணக்கூடியதாக உள்ளது;

எனவே இந்த அப்பியாசக் கொப்பிகளை உடனடியாகப் பாவனையிலிருந்து நீக்கும் படி உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். இல்லையேல் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் கிடுகுப் புவிக்கு மாணவர் அமைப்பின் உதவியுடனும், எமது சகோதர சங்கங்களின் உதவியுடனும் மாணவர்களிடமிருந்து கொப்பிகளை வாங்கி எரிக்க நேரிடும் என்பதைத் தெளிவாக மீண்டும் வலியுறுத்தித் தெரிக்க விரும்புகின்றோம். -இ

யாழ்ப்பாணம் கொழும்பு துரித தபாற் சேவை

வியாழன் முதல் ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் சேவையை மேலும் முன்னேற்றும் நோக்கில் யாழ். குடாநாட்டிற்கும் இயங்கும் திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும், தனியார் தாபனங்களுக்கும் முதலாவதாகத் தினசரி நன்னை 14 ம் திகதி வியாழக் கிழமை முதல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் "பிளம்போயன்" மூலம் யாழ் – கொழும்பு தபாற் சேவை நடைபெறும்.

இத்தபாற் சேவை மூலம் அனுப்பப்படும் தபாற் பைகளில் உச்ச நிறை மட்டுப்படுத்தப் படுவதுடன் மேற் கூறிய சேவைகளுக்கு முதலிடம் வழங்கப்படுவதும் முடிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் இது போன்ற யாழ் – கொழும்பு தபாற் சேவையை ஆரம்பிப்பதற்கு கொழும்பு சென்று ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய முயற்சிப்பதாக யாழ் மாநகர முதல்வர் திரு. எஸ். எம். சேதுராவலர் தெரிவித்துள்ளார். -சி

பலாலி ஷெல் வீச்சுக்கு அஞ்சி

அச்சுவேலி மக்கள் இடம்பெயர்வு

(சோபாய்)

நேற்று முன்தினம் இரவு 7-30 மணிளவில் பலாலி ராணுவ முகாமில் இருந்து அச்சுவேலி பத்தமேனி தென்மூலை போன்ற பகுதிகளை நோக்கி மூலமாக ஷெல்வீச்சு இடம் பெற்றது. இதனால் பீதியடைந்த மக்கள் இரகிரமாக இருபிடங்களை விட்டு அயல் கிராமங்களுக்கு சென்றனர்.

பலாலி ராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட மேற்படி ஷெல்கள் தெல்முலை தோலைப் பருத்தித்துறைப் பகுதிகளிலும் தோட்டப்பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. அச்சுவேலி ஸ்ரீராம விதியில் உள்ள வெளிக்கடை மூர்த்தி என்பவரது வீட்டில் இரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தது. இதனால் அவ்வீட்டில் இருந்த மூன்று பல்லாயினர் இவ்விடம்மூர்த்தி பேத்தி நாகஜி (வயது 55) இவ்விடம் மூர்த்தி சுதர்சினி (வயது-19) மேலும்பிள்ளைவுத்தாவதேவி (வயது-45 ஆகிய மூவருமே பலியானவர்களாவர். பலரும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை அச்சுவேலி தெற்கு மேற்கு பகுதிகளில் வசித்த மக்கள் பெரும் பீதியடைந்து தமது உடைமைகளுடன் வெளியேறி வருவதையும் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு இவர்களது வீட்டு மதிலில் வீழ்ந்து வெடித்தன. இதனைக் கண்ட அவலமும் ஓடி வந்த போது வீட்டில் உள்ளவர்களுடன் அணைந்து விட்ட தாயும் வீட்டில் மூன்றில் இருந்த முனைக் கதவம் சேர்ந்தும் கடையோர் மூலம் பார்த்தபோது தாயினி இடுப்பில் காயத்துடன் கிடந்ததாகவும் இவருடன் தாயார் பேத்தியாகிய தங்கியின் வலதுபுறம் துளைக்கப் பட்டும் சகோதரர்களின் மூடன் வெளியில் வந்த நிலையிலும் கிடந்தனர்.

உடனடியாக தாயினி அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஏனைய இருவரும் அவ்விடத்திலேயே இறந்து விட்டனர். பின்னர் தாயினியும் வைத்தியசாலையில் மரணமானார்.

(166 - ஐ)

சமாதானத்திற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் முடியாது.

கே:- இந்தக் குண்டுவெடிப்பினால் உல்லாசப் பயணத் துறைக்கு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதல்லவா?

ப: இருக்கலாம். உல்லாசப் பிரயாணத்துறை சீசன் ஏற்பிரல் மாதத்தில் தொடங்குகிறது. இதனால் இதைச் செய்திருக்கலாம் என்று கூற முடியும்.

கே: சமாதானத்தீர்வு பற்றி விடுதலைப்புலிகள் விடுத்த அழைப்பை அரசாங்கம் உதாசீனம் செய்கிறது. என்று சில அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது பற்றி?

ப: அரசாங்கம் சமாதானத் தீர்வுக்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதற்கும் பதில் வரலாம். ஏன் என்று இதற்குரிய காரணங்களைச் சொல்ல முடியாது. சமாதான நடவடிக்கை எடுப்பதற்கு முன் இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதிடு இராணுவம் உறுதியடைந்து மேலாதிக்க நிலையும் முயற்சி தற்போழுது நடைபெறுகிறதென்று அறிகின்றோம் எனினும். ம-இ

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(வரைவுள்ளது)

பதவி வெற்றிடம்

பதவி: நிதி முகாமையாளர்

வயது: 25 — 45 வரை

சம்பள அளவுத்திட்டம்:

1305 — 60 X 4 — 75 X 11 — 2370

(அத்துடன் 314/- + 860/-

படிகளுடன் அடிப்படைச் சம்பளத்தில் 30% ஆகவும் வழங்கப்படும்)

குறிப்பு:

★ யாழ். மாவட்டம் முழுவதும் வெளிக்கள வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

★ மேலதிக விபரங்கள், விண்ணப்பப்படிவம் ஆகியவற்றிற்கு சமாச காரியாலயத்தைத் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 23-04-1994

தலைவர்,

யாழ். மாவட்ட

சி. க. கூ. ச. சமாசம்.

(ஏ-8979)

அழிந்த வளங்களை மீள் வளமாக்குவோம்

இராசி பலன்

10 4 1994

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 28)

மேஷம்: முழுவதும், உத்தரகோடி முற்பகல் 9-26 வரை, இராகுகாலம் மாலை 4-36 முதல் 6-06 வரை, சந்திராஷ்டம நேரம் காலை 9-06 முதல் 19-36 வரை, அமாவாசை விரதம்.

மேடம்: தொழில் பாதிப்பு, கவனம், மனச் சஞ்சலம்.

இடபம்: நன்மை நேரம், விருந்துபசாரம், புகழ்.

மிதுனம்: புதிய வரவுப்பு, பண வரவு, இனிய செய்தி.

கடகம்: வரவுக்கு மேல் செலவு, மன வருத்தம், செலவு.

சிங்கம்: வழியில் இடையூறு மனச் சஞ்சலம், தாபம்.

கன்னி: சிறு பயணம், நண்பர் சேர்க்கை, தாமதம்.

துலாம்: காரிய வெற்றி, கலைஞர் உதவி, தெய்வ தரிசனம்.

விருச்சிகம்: உறவினர் சந்திப்பு, பணமுடை, எதிர்ப்பு.

தனுசு: தொழிற் சுமை, குடும்ப வேறுபாடு, பதக்கம்.

மகரம்: தனிச்சலான முயற்சி, சுப காரியம், திடீர் கடன்.

கும்பம்: மனச் சோர்வு, நினைவுகளை மீட்டல், அரசு உதவி.

மீனம்: குடும்ப சுகம், கலை ஆர்வம், சகோதர உதவி.

- ஜோதிடன்.

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-04-10 ஞாயிறு இரவு

8-01 அன்னை பூபதி நினைவு சிறப்பு நிகழ்ச்சி 'பூபதியின் தியாகம் புனிதமானது.

8-10 யாழ். பொலிஸ்நிலைய தாக்குதல் நினைவு சிறப்பு நிகழ்ச்சி 'விடுதலைக்கான முன் பாய்ச்சல்'.

8-30 செய்திகள்.

8-40 தொடர் நாடகம்- 'இலங்கை மண்' 21ம் அங்கம்.

1994-04-11 திங்கள் காலை

7-02 மாவீர வணக்கம்.

7-15 அன்னை பூபதி நினைவு சிறப்பு நிகழ்ச்சி 'தமிழர்கள் போற்றும் தமிழ்த் தேசிய பூபதி'.

7-25 மலர் ஆரம்.

7-45 செய்திகள்.

7-50 பத்திரிகைச் செய்திகள்.

7-55 தாயகப் பாடல்கள்.

ஜோர்மனிக்குள் நுழைய முயன்ற 33 இலங்கையர்கள் கைது

(பொன்)

ஜேர்மனிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்த 33 இலங்கையர்கள் கற்நாட்டு பஸ்டபியிலிடம்பெயர்ந்த கொலை டனர்.

'செக்' குடியரசிலுள்ள இருந்து ஜேர்மனிக்குள் சட்ட விரோதமாக நுழைய முயற்சித்த போதே குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனராம். ட்ரக் வண்டி மூலம் ஜேர்மன் எல்லை இலக்கி கடக்க முயற்சித்த போது ஜேர்மன் எல்லை பாதுகாப்பினரிடம் சிக்கி கொண்டனராம்.

கைதிபடி 33 பேரும் தடுத்து வைக்கப்பட்டு தற்போது தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் அனைவருமெதிகிருந்து வந்தார்கள் என்ற இடத்திற்கே மீண்டும் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளாவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே ஜேர்மனிக்குள் நுழைய முயற்சித்த இலங்கை அகதிகள் பலர் தாயை செய்யப்பட்டபின் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதும் தெரிந்ததே. (பி)

சர்ச்சை தொடர்கிறது கிரிக்கெட் வீரர்களுக்கு மீண்டும்தடை திகாண்சோதனை

(தொழும்பு)

ஷரீஜா கிரிக்கெட் போட்டியை மருத்துவ மற்றும் உடல் தகுதிகான பரிசோதனையில் தோல்வி விடைந்த கிரிக்கெட் வீரர்களுக்குப் புதிய பரிசோதனைகளை நடத்துவதென தீர்மானத்தை எடுத்து இலங்கையில் கிரிக்கெட் சர்ச்சை நேற்று புதிய திருப்பத்தை அடைந்தது.

உபதலைவர் தரங்கிதடி சில்வா உட்பட ஐந்து கிரிக்கெட் வீரர்களுக்குப் புதிதாக உடல் தகுதிகான் பரீட்சை நடத்துவதற்கு இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மதியும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும், தலைவர் ஒலிபரப்பு அமைச்சரு மான டிரோன் பெரேரா டோவும் இணங்கியுள்ளனர்.

ஜனதிபதி ஆ. பி. விஜய துங்க கிடுத்த கோரிக்கை கோளுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த சிலாளாரிடு வீரர்கள் நேற்று மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மி)

கிழக்கு பல்கலை மாணவர்களுக்கு

(வாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தாயகம் திரும்பி வரத்து ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தகவல் பரவியும் வாழ்ப்பாண மாணவர்கள் இன்னமும் எதிர்வரும் 16ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு வாழ் பஸ் நிலையத்திற்கு வருமாறு தருமாறு சக மாணவர்களுக்கு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மொழி ஆசிரியர் வர்த்தமானி பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி ஆசிரியர் பதிருத்துறை நிலவுகின்ற பாட சாலைகளில் தமிழ்மொழிமூலம் கற்பிப்பதற்கு பயிலுனர் ஆசிரியர்களை நியமனம்செய்வதற்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 1994ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதியாகும்.

இது குறித்த மேலதிக விபரங்கள் அடங்கிய வர்த்தமானியை "சமநாடு" காரியாலயத்தில் பார்வையிடலாம். - 162-வி

பிரேமா ஆதரவாளர்கள் முன்னுக்கு வருகின்றனர்

(தொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர்களுக்கு பிரேமதாசா ஆதரவாளர்கள் இப்பொழுது முன்னுக்கு வருகின்றார்கள் என்று எமது பொலனறுவை பி. பி. இ. செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அதேவேளை குறிப்பிடுகையில், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 23 ஆசனங்களில் பலப்பிட்டிய மாத்திரம் ஐக்கிய தேசியக்கட்சி வென்ற தாகவும் மாகாண சபைத் தேர்தலில் பிரேமதாசா பலப்பிரயோகம் நடாத்தி வெற்றி பெற்றுள்ளதாகவும் பிரேமதாசா ஆதரவாளர்கள் கூறிவருகின்றனர். பிரேமதாசா பற்றி தேர்தல்பிரசாரங்களில் எடுத்துரைக்கும் கருமை

பைலினர் உஷார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் கிழிப்புடன் செயற்பட்டு தகவல்களைத் தெரிவிக்குமாறும் பொலிசார் கேட்டுள்ளனர். நாளை தேர்தல் நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களிலும் இராணுவத்தினரும் பொலிசாரும் பெருமளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் இரவு நேர நேரந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களெனவும் கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் ஏ எஸ். சேனரத்ன தெரிவித்தார். (பி)

தாண்டிக்குளத்தில் வைத்து தமிழ்பயணிகள்கடும்சோதனை

ரெயிலில் பணம், நகை சூறை

[கவுனியர்]

தலைநகர் கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி வரும் பயணிகள் வடபகுதியிலிருந்து சேகரிக்கப்படுகின்ற ரூபா.

கொழும்பிலிருந்து புகையிரதமூலம் யாழ் வரும் பயணிகள் வடபகுதி நோக்கிச் செல்வதற்கு முன் இத்தகைய முழுமையான சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

அங்கையில் இத்தகைய முழுமையான சோதனை ஒருவரும் தப்பாது செய்யப்படுகிறதாம். ட்ரக் வண்டி மூலம் ஜேர்மன் எல்லை இலக்கி கடக்க முயற்சித்த போது ஜேர்மன் எல்லை பாதுகாப்பினரிடம் சிக்கி கொண்டனராம்.

தாண்டிக்குளத்தில் வைத்து தமிழ்பயணிகள்கடும்சோதனை

ரெயிலில் பணம், நகை சூறை

[கவுனியர்]

தலைநகர் கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி வரும் பயணிகள் வடபகுதியிலிருந்து சேகரிக்கப்படுகின்ற ரூபா.

கொழும்பிலிருந்து புகையிரதமூலம் யாழ் வரும் பயணிகள் வடபகுதி நோக்கிச் செல்வதற்கு முன் இத்தகைய முழுமையான சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

அங்கையில் இத்தகைய முழுமையான சோதனை ஒருவரும் தப்பாது செய்யப்படுகிறதாம். ட்ரக் வண்டி மூலம் ஜேர்மன் எல்லை இலக்கி கடக்க முயற்சித்த போது ஜேர்மன் எல்லை பாதுகாப்பினரிடம் சிக்கி கொண்டனராம்.

இத்திய ஜனதிபதியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மிருகக்காட்சிசாலையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு குறித்து இந்திய தூதரகமும் அதிகாரிகளும் விசாரித்து நிலைமைகளை அறிந்துகொண்டனர். மகி

குண்டுத்தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பிடித்த சின்னசுவாமி கோவில் தொடரும் நோக்கில் இந்தக் குண்டு வெடிப்புகளை நடாத்தியிருக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெற்கில் அரசுக்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புணர்வுகளை திசை திருப்பும் நோக்கிலும் நாட்டில் நிலவுகின்ற பதட்டநிலைமையை பிரச்சினையே என ஜனதிபதி கூறிவருவதை உறுதிப்படுத்தும் நோக்கிலும் ஜனதாதளக் கட்சியினரே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர் எனவும் இது உண்மையானால் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைமை இன்னும் மோசமாகும் எனவும் அவதானிகள் கூறியுள்ளனர்.

—மகி

புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டதாகவும் அவர் மே தெரிவித்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்பு குறித்து இதுவரை எவருமே உரிமை கோரவுமில்லை புலிகளும் தொடர்பிருக்கலாமென உளவுத்துறையினர் கூறுகின்றனர். ஏ ஜன்ஸி செய்திகளும் இதனையே மோடிப்பிட்டு வாசித்துள்ளன.

தேர்தலை பாழ்ப்பாணத்தில் சென்றிருந்த சபாநாயகர் முகாமுக்கில் வி ஜனதாவை ஜனதிபதி இடை நிறுத்திய தால் ஆத்திரமுற்ற புலிகள் இந்தக் குண்டு வெடிப்புகளை நிழ்த்தியிருக்கலாமென அவதானிகள் கருதுவதாக 'ஏ. எப். பி.' செய்தி தெரிவித்தது. (ம-கி)

கொழும்பு குண்டு வெடிப்பு இலங்கைக்கு ஒரு பேரிடி!

பி. பி. ஸி. விமர்சனம்

(தொழும்பு)

சுற்றுலாத்துறை தரும் வருவாயை பெரிதும் சார்ந்திருக்கும் இலங்கைக்கு நேற்று கொழும்பில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு ஒரு பேரிடி என்று பி. பி. ஸி. இன் கொழும்பு முகவர் கியாகோ நோரஸ் தெரிவித்துள்ளார்.

செற்ற ஆண்டு இங்கிலாந்தில் 5 மில்லியன் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்ததாகவும் 200 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணியாகக் கிடைத்தது. ஆனால் இந்தக் குண்டு வெடிப்புகளின் அலை மீறி தான இருப்பதாக கடைசிலுள்ள போராளி குழுவின் எச்சரிக்கை இது என்பதாக சுட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

வீரச்சாவு

(வாழ்ப்பாணம்)

வாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்து தொடர்பில் 2-ம் லெப்டினன் ஜெயந்தன் (முத்தையா ஜெயபாலன் - நாவற்குழி) வீரச்சாவு அடைந்தார். இவருடு தமிழீழ விடுதலைப் புலிகளின் மது வீரமரணத்தை தெரிவித்துள்ளனர். -மி

குண்டு வெடிப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நந்த மற்றொரு நபரான அருணாசலம் எனபவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்குபலத்த காயம் ஏற்பட்டமையால் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பில் இருந்தவர்கள் வீட்டை பரிசோதனைசெய்த பொலிசார் இன்னொரு குண்டை கண்டெடுத்ததாகவும் ஏ எப். பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது. -ம

மலையினரின் சோதனை தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பல குண்டுவெடிப்புகளையடுத்து கொழும்பில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வீதிகளில் நடமாடுவோர் பயணிகளாக நுணுக்கமாக சோதனை செய்யப்படுவதாகவும் வாகனங்களும் கடுமையாக சோதனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகத்துக்கிடமான நபர்கள் பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்படுவதாகவும் அவ்வாறானவர்களை தொடர்ந்து விசாரணை செய்யுமாறும் கடும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளனவாம். -மி

4 விடுதிகளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையர் ஹோட்டலில்

கடந்த ஞாயிறு இரவு 10-45 மணி முதல் 12 மணி வரையில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து வெடித்துள்ளன. வெள்ளவத்தையில் தமிழர்கள் பெருமளவிலுள்ள பகுதியில் 'சபையர்' ஹோட்டலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் ஹோட்டல் முற்றாகவே சேதமடைந்துள்ளது. கட்டடத்தின் பிரதான பகுதியும் வாகனத் தரிப்பிடமும் கடுமையாக சேதமடைந்துள்ளன. பல அறைகளும் தளபாடங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. ஹோட்டலில் இடம்பெற்ற சேதத்தைவிட இதிலே பெருஞ் சேதம் ஏற்பட்டுள்ளது.

மரியர் ஹோட்டலில்

கடுத்த குண்டு வெடித்தது "மரியர் கிறுதியில்" இடம்பெற்றது. இவ்விடுதி அதிகாரிகளின் நிர்வாகத்தில் இயங்கி வருகிறது. இதில் கீழ்ப்பகுதி ஒன்றிலிருந்தே குண்டு வெடித்துள்ளது. இதனால் கீழ்ப்பகுதியும் அதற்கு மேற்றியுள்ள பகுதியும் பலத்த சேதமடைந்துள்ளன. மேற்பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து இப் பகுதியில் பெரும் பதற்றமே ஏற்பட்டது. பொலிசார் உடனடியாக இந்த ஹோட்டலை சுற்றி முற்றுகையிட்டனர். இந்த ஹோட்டலை ஜனதிபதியின் செயலாளரின் காரியாலயத்திற்கு அருகிலும் ஜனதிபதியின் வாசஸ்தலத்திற்கும் மிக அருகிலும் உள்ளது.

தாஜ்சமுத்திரா ஹோட்டலில்

மூன்றுவதாக தகவல் 12 மணியளவில் காலிமுகத்திடலில் இருந்து முன்பாகவுள்ள ஹோட்டல் தாஜ்சமுத்திராவில் குண்டு வெடித்துள்ளது. இந்த ஹோட்டலில் இந்தியர்களின் நிர்வாகத்தில் உள்ளது. இந்த ஹோட்டலில் குண்டு வெடிப்பால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. உயிரிழப்புகளும் இடம்பெறவில்லை. காலிமுகத்திடலில் இந்த ஹோட்டல் இருப்பதால் குண்டு வெடிப்பு சத்தத்தையடுத்து மக்கள் பீதியடைந்து வெளியேறியதற்கு ஏதுவாக அமைந்தது. இந்த ஹோட்டலில் இராணுவ தளபதிகளும் அடிக்கடி தங்கி வருவதால் இந்த ஹோட்டல் பாதுகாப்பு மிக்கதாக இருந்தது. இந்த ஹோட்டலில் இடம்பெற்ற சேதத்தைவிட இதிலே பெருஞ் சேதம் ஏற்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "சமநாடு" லிமிட்டெட் தினசரிக்காக யாழ்ப்பாணம் சென்ட் சேவியர் மேற்கு வீதி, 68-2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under license Number B/10336/B